# செயலட்டை – சுற்றாடல் (01)

## பிரமி கல்வி நிலையம்

S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : ......................................


✓ **ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பூரண பௌர்ணமி தினத்திலிருந்து அமாவாசைத் தினம் வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை.
   1) 14 ஆகும் 2) 28 ஆகும் 3) 16 ஆகும் 4) 30 ஆகும்

2. இரவு நேரங்களில் ஒளி பரப்பிக் கொண்டு பயணிக்கும் பூச்சி.
   1) தும்பி 2) அந்து 3) மின்மினிப்பூச்சி 4) சாக்ருவி

3. விவசாயச் செய்கையில் "பரப்புப்பலகை" எனும் உபகரணம் பயன்படுத்தப்படுவது.
   1) வயலுக்கு வரும் பிராணிகளை விரட்டுவதற்கு
   2) வயலில் உள்ள சேற்றை மட்டப்படுத்துவதற்காகும்
   3) வயலை உழுவதற்காகும்
   4) வயலை அறுவடை செய்வதற்காகும்

4. இவ்வுருவினால் காட்டப்படும் பிராணி.
   1) உண்ணி 2) அட்டை
   3) மயிர்கொட்டி 4) இராமபாணம்



5. மாணிக்கம் அகழ்ந்து எடுக்கப் பயன்படும் இவ்வுபகரணத்தின் பெயர்.
   1) நாம்புவ 2) மடி
   3) தீதாள் 4) மணியாசு



6. இவ்வுருவினால் காட்டப்படும் தேசிய வீரர்.
   1) சேர். டீ.பீ. ஜயதிலக்க
   2) கலாநிதி. டீ.பீ. ஜாயா
   3) கலாநிதி. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா
   4) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி



7. இவ்வுருவினால் காட்டப்படும் சங்கீத உபகரணம்.
   1) தம்பட்டம் 2) ரபான்
   3) தவில் 4) தபேலா



8. மேற்கு வானில் எமக்கு வானவில் தென்படுவது.
   1) மாலை நேரத்தில் 2) காலை நேரத்தில்
   3) இரவு நேரத்தில் 4) மேலேயுள்ள எல்லா விடைகளும் பிழையானவை

9. முட்கள் மூலம் கொழுகொம்புடன் இணைந்து படர்ந்து செல்லும் கொடி வகை.
   1) பாகல் 2) புடோல் 3) சாத்தாவாரி 4) வெற்றிலை

S.Mohan

10. இலங்கையின் தேசியக் கொடியில் காணக்கிடைக்காத மூலவர்ணம்.
   1) நீலம் 2) பச்சை 3) மஞ்சள் 4) சிவப்பு

11. மரவள்ளித் தாவரம் உணவைக் களஞ்சியப்படுத்தி வைப்பது.
   1) ஆணிவேர்த் தொகுதியிலாகும் 2) தண்டுகளிலாகும்
   3) இலைகளிலாகும் 4) வேர்களிலாகும்

12. தரத்தில் உயர்ந்த பொருட்களில் காணப்படும் இலட்சினை.
   1) SLS 2) ISBN 3) CFL 4) LED

13. இத்தாவரத்தின் பட்டை உணவு சமைக்கும் போது சுவையூட்டப் பயன்படும். அத்தாவரம்.
   1) சேரி 2) கறிவேப்பிலை 3) இறம்பை 4) கறுவா

14. நிலத்தில் வளரும் தாவரமொன்று நீரையும் பசளையையும் பெறுவது.
   1) வேர்களினால் 2) பூக்களினால் 3) இலைகளினால்

15. நிலத்தில் சேரும் பல்வேறு கழிவுப் பொருட்களைச் சிறுசிறு துண்டுகளாக்கி அவை உக்குவதற்குத் துணைபுரியும் பிராணி.
   1) மண்புழு 2) நத்தை 3) செண்பகம்

16. மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையின் இருபக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் ஒரு விளையாட்டு.
   1) வலைப்பந்து 2) வொலிபோல் 3) கூடைப்பந்து

17. கொதிக்கும் நீரினால் உடம்பின் ஒரு பகுதி வெந்தால் முதலில் நாம் செய்ய வேண்டியது.
   1) அவ்விடத்திற்கு உப்புக் கரைசலை இடல்.
   2) அவ்விடத்தை புடவைத் துண்டினால் இறுக்கிக் கட்டுதல்.
   3) அவ்விடத்திற்குத் தேங்காய் எண்ணெய் தடவுதல்.
   4) அவ்விடத்தை குளிர்ந்த நீரினால் கழுவுதல்.

18. பிரிந்த இலைகளையுடைய தாவரம் அல்லாதது.
   1) பப்பாசி 2) கத்தாப்பு 3) பாகல் 4) ஆமணக்கு

19. தூரியன் பூக்களை நாடிவரும் பிராணி.
   1) வௌவால் 2) குயில் 3) மழைக்குருவி 4) மீன்கொத்தி

20. பிரதான வீதிகளில் வீதியை நடந்து கடக்கும் இடங்களில் புதிதாக கோடுகள் வரையப்பட்டுள்ளது.
   1) மஞ்சள் நிறத்தினால் 2) கறுப்பு நிறத்தினால்
   3) வெள்ளை நிறத்தினால் 4) சிவப்பு நிறத்தினால்

21. இலங்கையின் மிகப்பெரிய மாவட்டம்.
   1) பொலன்னறுவை 2) கொழும்பு 3) குருணாகல் 4) அநுராதபுரம்

22. தினசரி பத்திரிகையொன்றில் பிரதான செய்திகளைக் காணக்கிடைப்பது.
   1) இறுதிப் பக்கத்தில் 2) நடுப்பக்கத்தில்
   3) முதலாவது பக்கத்தில் 4) இரண்டாவது பக்கத்தில்

23. இலங்கைக்கு அண்மையிலுள்ள பல தீவுகளைக் கொண்டமைந்த நாடு.
   1) மாலைதீவு 2) இந்தியா 3) பாகிஸ்தான் 4) நேபாளம்

S.Mohan

24. புரதச்சத்து அதிகம் கொண்ட உணவு வகைகள்.
 1) பிட்டு, பாண்  2) பசளி, பொன்னாங்கண்ணி
 3) கரட், லீக்ஸ்  4) இறைச்சி, பருப்பு

25. காலை சூரிய ஒளியிலிருந்து எமக்கு கிடைக்கும் விற்றமின் வகை.
 1) விற்றமின் E  2) விற்றமின் A  3) விற்றமின் D  4) விற்றமின் B

26. மிக விரைவாக ஆவியாகும் திரவம்.
 1) தேங்காய் எண்ணெய்  2) மண்ணெண்ணெய்
 3) நீர்  4) பெற்றோல்

27. வாய் மூலம் கொடுக்கப்படும் தடுப்பூசி.
 1) ஈர்ப்புவலி நோய் தடுப்பூசி  2) போலியோ தடுப்பூசி
 3) சின்னமுத்து தடுப்பூசி  4) நீர் வெறுப்பு நோய் தடுப்பூசி

28. மண்ணை வளமாக்கும் பிராணி.
 1) பூரான்  2) மண்புழு  3) அட்டை  4) எறும்பு

29. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருட்டிக் கொள்ளும் பிராணி.
 1) மரவட்டை  2) மயிர்கொட்டி  3) பூரான்  4) வெட்டுக்கிளி

30. ஆறு கால்களை உடைய பிராணி.
 1) உண்ணி  2) சிலந்தி  3) வெட்டுக்கிளி  4) இறால்

31. குட்டியீன்று இனம் பெருக்கும் பிராணி.
 1) ஆந்தை  2) மயில்  3) வாத்து  4) வௌவால்

32. தாவர இலைகளைப் பயன்படுத்தி தனது கூட்டினை அமைத்துக் கொள்ளும் பிராணி.
 1) முசுறு  2) தூக்கணாங்குருவி
 3) இராமபாணம்  4) குளவி

33. நாய் கடித்தால் உடனடியாகச் செய்ய வேண்டிய முதலுதவி.
 1) தேங்காய்ப் பாலை குடிக்கவைத்தல்
 2) காயத்தை ஓடும் நீரினால் சவர்க்காரமிட்டு கழுவுதல்
 3) காயத்திற்கு மருந்திட்டு துணியொன்றினால் கட்டுதல்
 4) மரமஞ்சளை அவித்து நோயாளிக்குப் பருகக் கொடுத்தல்

34. துளசி இலைகளை எரித்துப் புகையூட்டல் செய்வது.
 1) வீட்டு ஈக்களை விரட்டுவதற்காகும்
 2) நுளம்புகளை விரட்டுவதற்காகும்
 3) எலிகளை விரட்டுவதற்காகும்
 4) கரப்பான் பூச்சிகளை விரட்டுவதற்காகும்

35. எலுமிச்சை சாற்றில் அதிகமாகவுள்ள போசனைப் பதார்த்தம்.
 1) விற்றமின் C  2) கல்சியம்  3) புரதம்  4) கொழுப்பு

36. அசுத்தமான நீரினைப் பருகுவதால் ஏற்படும் நோய்.
 1) ஈர்ப்புவலி  2) நீர் வெறுப்பு நோய்
 3) சிக்குன்குன்யா  4) வாந்திபேதி


S. Mohan 0779685514
S.Mohan

37. 'கண்டமாலை' நோய்க்கு பிரதான காரணம்.
   1) விற்றமின் குறைபாடு
   2) கல்சியம் குறைபாடு
   3) அயடீன் குறைபாடு
   4) இரும்புச்சத்து குறைபாடு

38. நுவரெலியா பிரதேசத்தில் மிகச் செழிப்பாக வளரும் ஒரு தாவரம்.
   1) ரம்புட்டான்
   2) தேயிலை
   3) பனை
   4) இறப்பர்

39. தென் மாகாணத்திற்கு உரித்துடைய மாவட்டம் அல்லாதது.
   1) திருகோணமலை
   2) காலி
   3) மாத்தறை
   4) அம்பாந்தோட்டை

40. பேருந்து வண்டியினுள் ஏறும், இறங்கும் ஒழுங்குமுறை.
   1) முன்பக்கத்தால் ஏறி முன்பக்கத்தால் இறங்குதல்
   2) முன்பக்கத்தால் ஏறி பின்பக்கத்தால் இறங்குதல்
   3) பின்பக்கத்தால் ஏறி பின்பக்கத்தால் இறங்குதல்
   4) பின்பக்கத்தால் ஏறி முன்பக்கத்தால் இறங்குதல்

41. இவ்வீதிச் சமிக்ஞை மூலம் கருதப்படுவது.
   1) முன்னால் பாதுகாப்பான புகையிரதக் கடவை
   2) முன்னால் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
   3) பேருந்து
   4) முன்னால் புகையிரத நிலையம்



42. விவசாயிகளினால் பயன்படுத்தப்படும் உபகரணம்.
   1) கலப்பை
   2) மணியாசு
   3) பட்டடை
   4) வனைசில்லு

43. மீனவர்கள் மீன்களை பிடிப்பதற்குப் பயன்படுத்தும் கூடை வடிவில் அமைந்த உபகரணம்.
   1) மடி
   2) நாம்புவ
   3) அத்தாங்கு
   4) கரைவலை

44. நீர் வெறுப்பு நோயினை எமக்குப் பரப்பாத ஒரு பிராணி.
   1) நரி
   2) குரங்கு
   3) பூனை
   4) பல்லி

45. பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவத்தையுடையன. அதன்படி மாறுபட்ட வடிவத்தையுடைய தாவர இலை.
   1) வட்டக்கண்ணி
   2) திப்பிலி
   3) மிளகு
   4) வெற்றிலை

46. இலங்கையின் தேசிய மரத்தில் பூக்கும் பூவின் இதழ்களின் எண்ணிக்கை.
   1) 5 ஆகும்
   2) 4 ஆகும்
   3) 6 ஆகும்
   4) 7 ஆகும்

47. முட்கள் உள்ள தாவரம் அல்லாதது.
   1) வட்டுக்கத்தரி
   2) கண்டங்கத்தரி
   3) தொட்டாற்சுருங்கி
   4) தேங்காய்ப்பூக்கீரை

48. தற்போது இலங்கையில் பயன்படுத்தும் தொலைபேசி எண்ணிற்குரிய மொத்த இலக்கங்களின் எண்ணிக்கை.
   1) 10 ஆகும்
   2) 11 ஆகும்
   3) 9 ஆகும்
   4) 8 ஆகும்

49. தேசப்படங்களில் காடுகளை குறித்துக்காட்டும் நிறம்.
   1) பச்சை
   2) நீலம்
   3) சிவப்பு
   4) காவி

50. முற்காலத்தில் அரிசியை மாவாக்கப் பயன்பட்ட கருவி?
   1) திருகைக் கல்
   2) உரல் உலக்கை
   3) அம்மி
   4) ஆட்டுக்கல்


S. Mohan 0779685514